**வாக்குமூலம்**

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்–I,**
**கொடைக்கானல்.**

**தேதி: 04.09.2025**

**OS. No. 36/2016**

**வழக்கு சாட்சி PW.1– வேலுச்சாமி , த/பெ. திருக்கரண்**

( சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார் )

**1 மற்றும் 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

தாவா சொத்தானது நான் கிரையம் வாங்கி பட்டா பெற்று தனியாக அனுபவித்து வரும் சொத்து என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 ஆவணத்தில் மொத்தம் 14 நபர்கள் பெயரில் கூட்டுப்பட்டாவாக உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தில் சர்வே எண் பிராதில் 424 என சொல்லியுள்ளேன். நான் தாக்கல் செய்த வா .சா.ஆ.2 ஆவணத்தில் சர்வே எண்ணானது 424/14A என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வா .சா.ஆ.2 ஆவணமானது தாவா சொத்திற்கு தொடர்பற்ற ஆவணம் என்றால் சரியல்ல . வழக்கு தாவா சொத்தை நான் எந்த வருடம் கிரையம் வாங்கினேன் என்றால் , தற்போது எனக்கு நினைவில்லை. வா.சா.ஆ.1 ஆவணத்தின்படி தாவா சொத்தினை 20.01.2000 தேதி கிரையம் பெற்றேன் என்றால் சரிதான். நான் தாவா சொத்து வாங்கி மொத்தம் தற்போது 25 வருடங்கள் கடந்துவிட்டது என்றால் சரிதான்.

கடந்த 25 வருடங்களாக நான்தான் தாவா சொத்திற்கு வரி செலுத்தி அனுபவம் செய்து வருகிறேன் என்றால் சரிதான் . 2016 ம் ஆண்டு வரி ரசீதை தவிர வேறு வரி ரசீது எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான் . பட்டாவானது கூட்டுபட்டாவாக இருக்கும்பட்சத்தில் வரிரசீதும் , கூட்டுப்பட்டாதார்களின் பெயரில் வழங்கப்படும் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வரி ரசீதான வா.சா.ஆ.3 ஆவணம் வழக்கிற்கு தொடர்பற்ற ஆவணம் என்றால்

சரியல்ல. 15.02.2013 சையது அபுதாகீர் வழக்கின் 3ம் பிரதிவாதிக்கு ஒத்தி எழுதிக்கொடுத்து அதை பதிந்து அதை ஆவணமாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். 3ம் பிரதிவாதிக்கு தாவா சொத்தில் 1 சென்ட் நிலம் ஒத்தியாக கொடுத்துள்ளேன் என்றால் சரிதான் . தற்போது ஒத்தியை நான் மீட்டுவிட்டேனா என்றால் , நான் ஊருக்கு சென்ற சமயத்தில் கடையை இடித்து விட்டார்கள் , அதனால் ஒத்தியை மீட்கவில்லை . நான் மூன்றாம் பிரதிவாதிக்கு ஒத்தி பணத்தை தராத காரணத்தால் சையது அபுதாகீர் , இரண்டாம் பிரதிவாதியான மோகினி என்பவருக்கு பதிந்து கொடுத்துவிட்டார்.

நான் 1ம் பிரதிவாதியிடம் வாங்கிய அட்வான்ஸ் ரூபாய் .50,000/− ஐ அவரிடம் திருப்பி செலுத்தியது தொடர்பாக ரசீது ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் நான் ரூபாய் .50,000/−ஐ திருப்பி கொடுக்கவில்லை.(சாட்சி பிறகு மீண்டும ரூபாய் .50,000/− ஐ திரும்ப செலுத்திவிட்டதாக சாட்சியம் அளித்தார். திருப்பி செலுத்தியதற்கான ஆவணங்கள் எதுவும் எழுதப்படவில்லை என தெரிவித்தார் . தங்கம்மாள் எனது மனைவி ஆவார் . பாலகிருஷ்ணன், இன்பராஜ் எனது மகன்கள் ஆவார்கள் . சகுந்தலா, சரோஜா ஆகியோர் எனது மகள்கள் ஆவார்கள் . நானும் எனது குடும்பத்தாரும் 1 மற்றும் 2 பிரதிவாதிகளிடம் வழக்கு தாவா சொத்து சம்பந்தமாக 960 சதுரடி நிலத்தை ரூபாய் .9,80,000/− ஐ கிரையம் பேசி அதனடிப்படையில் மொத்தம் ரூபாய் .7,80,000/− ஐ பெற்றுக்கொண்டு 1 மாத காலத்திற்குள் தாவா சொத்தை எழுதி தருவதாக ஒரு வெண்ணிலை கிரைய பத்திரம் எழுதிக்கொடுக்கப்பட்டதா என்றால் சரிதான் . அந்த கிரைய உடன்படிக்கை பத்திரத்தில் பத்திரம் முடிக்கும் நாளன்று தாவா சொத்து தொடர்புடைய ஆவணங்களை நான் பிரதிவாதிகளிடம் தருவதாக எழுதப்பட்டது என்றால் சரிதான் . அந்த கிரைய உடன்படிக்கை தேதியான 18.07.2013ம் தேதியன்று சுவாதீனத்தை பிரதிவாதிகளான பிரகாஷ் மோகினி வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அந்த மேறசொன்ன உடன்படிக்கைப்பத்திரத்தில் மேற்சொன்ன தேதியன்றே பிரதிவாதிகள் வேலி அமைத்து கட்டிடம் கட்டிக்கொள்ள சம்மதிக்கிறேன் என்ற சங்கதி குறிப்பிட்டு எழுதிக்கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான் . நான் கிரையம் வாங்கிய தாவா சொத்து 1410 சதுரடி ஆகும்.

தாவா சொத்து தொடர்பாக மாணிக்கம் என்பவரிடம் பிரதிவாதிகளுக்கு முன்பு விற்பது தொடர்பாக விற்பனை உடன்படிக்கை ஒன்று ஏற்படுத்திக்கொண்டேன் என்றால் சரியல்ல , கடனுறுதி சீட்டு மட்டும்தான் எழுதிக்கொண்டேன் . நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் , மாணிக்கம் என்பவருடன் நான் வழக்கு தாவா சொத்து தொடர்பாக ஏற்கனவே கிரைய உடன்படிக்கை ஆவணம் ஒன்று எழுதிக்கொடுத்தேன் என்றால் சரியல்ல.

மாணிக்கத்திடம் நான் முன்பணம் பெற்றுவிட்டு கிரைய உடன்படிக்கைபடி செயல்படாததால் என்மீது ஏற்றுதை ஆற்றுக வழக்கு ஒன்று பழனி சார்பு நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்து அதில் நான் தோன்றி வழக்கு நடத்தினேன் என்றால் சரிதான் . அந்த வழக்கானது மக்கள் நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டு இந்த வழக்கின் பிரதிவாதி பிரகாஷ் ரூபாய் .2,85,000/- வங்கி பரிவர்த்தனை மூலம் மாணிக்கத்தின் கணக்கிற்கு வழக்கு முடிக்கப்பட்டது என்றால் சமரசமாக பேசிதான் வழக்கு முடிக்கப்பட்டது . மேற்சொன்ன வழக்கு முடிக்கப்பட்டதன்பேரில் நான், பிரகாஷ், மாணிக்கம் மூவரும் சமாதான பத்திரத்தில் கையெழுத்திட்டோம் என்றால் சரிதான் . வா.சா.ஆ.5 ஆவணமான முதல் தகவல் அறிக்கையில் சம்பவ தேதி 22.09.2015 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான் . அந்த வழக்கிற்கான முதல் தகவல் அறிக்கையானது 29.03.2016 கொடுக்கப்பட்டு வழக்கு பதியப்பட்டுள்ளது என்றால் சரிதான் . தாவா சொத்தை அபகரிக்க வேண்டி பிரதிவாதிகள் மீது பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தை பதிந்து கொடுக்கவில்லை என்று சொல்லி பிரகாஷ் என்பவர் கொடைக்கானல் காவல்நிலையத்தில் 27.12.2014 மற்றும் 12.03.2016 ஆகிய தேதிகளில் புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான் . நானும், என் குடும்பத்தார்கள் இரண்டாம் பிரதிவாதி மோகினி என்பவரை தாக்கி அவருக்கு காயம் ஏற்படுத்தி அவரது நகைகளை அபகரித்து சென்றதாக 28.04.2016 ம் தேதி கொடைக்கானல் காவல் நிலையத்தில் குற்ற எண் .182/2016 என்ற வழக்கு என்மீது பதியப்பட்டது என்றால் சரியல்ல . மேற்சொன்ன வழக்கில் நான் உயர்நீதிமன்றம் வரை சென்று முன்பிணை தாக்கல் செய்து அதுவும் தள்ளுபடி செய்யப்பட்டது

என்றால் உயர்நீதிமன்றம் சென்றேன், ஆனால் என் மனு தள்ளுபடி செய்யவில்லை.

நான் தாவா சொத்தில் 1 சென்ட் நிலத்தை சையது அபுதாகீருக்கு ஒத்தி கொடுத்தன் அடிப்படையில் சையது அபுதாகீர் அதை மோகினிக்கு அவரது உரிமையினை ஒத்தியாக பதிந்து கொடுத்து தற்போது தாவா சொத்து மோகினி வசம் சுவாதீனத்தில் உள்ளது என்றால் பத்திரம் போடப்பட்டது உண்மைதான் , ஆனால் சுவாதீனத்தில் நான்தான் உள்ளேன் . 18.07.2013 ம் தேதி ஆவணத்தின்படி பிரதிவாதிகளிடம் சுவாதீனத்தை ஒப்படைத்துவிட்டேன் என்றால் சரியல்ல . நான் தாக்கல் செய்துள்ள வழக்கு ஆவணங்களுக்கும், வழக்கு தாவா சொத்திற்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல . நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல.

Taken down by me in open court and
read over to the witness and acknowledged
by him/her to be correct.

R ARUN PANDIAN
Digitally signed by R ARUN PANDIAN
Date: 2025.09.04 17:58:42 +0530

District Munsif cum Judicial Magistate No.I,
Kodaikanal.